மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.201/2011</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 03ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>03.02.2026 பி.வா.சா.4 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மற்ற பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன எதிர்வளக்குறை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேன் என்றால் தெரிந்து கொண்டேன். பெரியசாமி குடும்பத்தினர் 1974 ஆம் ஆண்டு பொது குடும்ப சொத்தை பொறுத்தவரை பெற்றார்கள் என்றால் சரிதான் அதிலிருந்து அந்த சொத்துக்களை தனித்தனியாக பங்கி வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் ஆகியோர் அவரவர் பாகத்தை தனித்தனியாக அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் இல்லை பொதுவாக தான் அனுபவம் செய்து வருகிறார்கள்.

2. 8ம் பிரதிவாதி தகப்பனார் 4 ஏக்கர் 80 சென்ட் நிலத்தை பொறுத்து தனியாக வாய்மொழி பாகக்காரர் செய்து கொண்டதன் அடிப்படையில்

தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை மேற்படி 4 ஏக்கர் 80 சென்ட் நிலத்தை எட்டாம் பிரதிவாதியின் தகப்பனார் வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் தனியாக அனுபவம் செய்து வருவதன் அடிப்படையில் அந்த சொத்துகளில் வீடுகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவை கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை.

3. அவர் தனியாக தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் கடந்த 25.06.2009 ஆம் தேதி எட்டாம் பிரதிவாதியின் தகப்பனார் எட்டாம் பிரதிவாதிக்கு ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் மேற்படி சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது அதன் அடிப்படையில் 8ம் பிரதிவாதி அந்த சொத்துக்களை பொறுத்து தனியாக உட்பிரிவுகள் செய்து வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றும் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் அவ்வாறு எனக்கு எதுவும் தெரியவில்லை.

4. 1974 பாகாகாரின் அடிப்படையில் நாளது தேதி வரை வரை மேற்படி சொத்துக்கள் பொதுவிலேயே இருந்திருந்தால் இவ்வளவு நாட்களாக அதில் பாகம் கேட்காமல் இருந்திருக்க மாட்டார்கள் என்றும் காலம் கடந்து இந்த வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடியாக தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>9, 26, 33 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் 1986 ஆம் ஆண்டு பிறந்தேன். நான் தாக்கல் செய்துள்ள என் தகப்பனார் பெயரில் ஆன கிரைய ஆவணத்தை சார் பதிவாளர்

அலுவலகத்தில் இருந்து யார் நகல் பெற்றார்கள் என்றால் நான்தான் வாங்கினேன். என் தகப்பனார் பெயர் ஜி.பழனிச்சாமி. அவர் இந்த வழக்கில் பிரதிவாதியாக உள்ளாரா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே அவர் இறந்துவிட்டார். என்னை இந்த வழக்கில் எந்த வருடம் தரப்பினராக சேர்த்தார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் இந்த வழக்கில் 36 ஆவது பிரதிவாதியாக உள்ளேன். இந்த வழக்கின் வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் ஆமாம்.

2. இந்த வழக்கை முதலில் 21 நபர்கள் மீது மட்டும் தாக்கல் செய்திருந்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது இந்த வழக்கின் சொத்துக்கள் எத்தனை காலை எண்களை உள்ளடக்கியது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 480 லிருந்து 489 வரை உள்ளது. அது பழைய காலை எண் புதிய காலை எண்கள் 91 முதல் 95 வரை உள்ளது. ரீ சர்வே எண்.93 இன் பழைய புல எண் என்னவென்றால் அது எனக்கு தெரியாது. காலை எண்.94 இல் லோகநாதன் என்பவர் பொது அதிகார ஆவணம் வாங்கியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

3. அவர் பொது அதிகார ஆவணம் எழுதி பெற்றதற்கு பின் தாவா சொத்துக்களை பொறுத்து வாய்மொழியாக பாகம் செய்து கொண்டார்கள் என்றால் இல்லை நான் சொல்லி உள்ள பழைய பாளையம் 480 முதல் 489 வரை உள்ள சொத்துக்களில் மொத்த விஸ்தீரணம் 93 ஏக்கர் 27 சென்ட் என்றால் ஆமாம் அது முழுவதும் பொதுவில் இருந்து வருவதாக நான் சொல்கிறேன் என்றால் ஆமாம். அந்த 93 ஏக்கர் 27 சென்ட் நிலங்களின் மொத்த உரிமையாளர்கள் யார் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. மேற்படி 93 ஏக்கர் 27 சென்ட் நிலத்தின் மொத்த உரிமையாளர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக வாதிகள்

சேர்க்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி 93 ஏக்கர் 27 செண்ட் நிலம் முழுவதையும் பாகம் செய்து கொள்ள கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அவ்வாறு கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 13 ஏக்கர் 98 செண்ட் நிலத்தில் எங்கள் பங்கை பிரித்து தர நான் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்.

5. மேற்படி 93 ஏக்கர் 27 செண்ட் பூமியின் உரிமையாளர்களுக்குள் 18 ஏக்கர் 65 செண்ட் நிலத்தை பொறுத்து தனியாக பாகம் செய்து அனுபவித்தார்கள் என்றால் இல்லை. வழக்கு சொத்து விபரத்தில் 18 ஏக்கர் 65 செண்ட் நிலத்தில் பொதுவில் 13 ஏக்கர் 98 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை 13 ஏக்கர் 98-3/4 செண்ட் என்று சொத்து விபரத்தில் கண்டிருந்தால் அது சரியானது என்று நான் சொல்கிறேனா என்றால் இல்லை அது தவறானது. வழக்கு சொத்து விபரம் தவறாக குறிப்பிடப்பட்டு முறையற்ற வகையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 18 கிரைய ஆவணம் 1959 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

6. அந்த சமயத்தில் எனக்கு ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவண விபரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் ஆவணத்தை படித்து பார்த்து அதை தெரிந்து கொண்டேன் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.18 ஆவணத்தில் இந்த வழக்குரை சொத்து விபரத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு 13 ஏக்கர் 98-3/4 செண்ட் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை அவ்வாறு சொல்லப்பட்டு இருந்தால் அது தவறு என்றால் ஆமாம் பொது அதிகாரம் ஆவணம் எழுதி பெற்ற லோகநாதன் என்பவர் பங்கையும் 9 மற்றும் 33 ஆகிய பிரதிவாதிகளின் பங்கை ஏமாற்றும் வகையிலும்

உண்மைக்கு புறமான சங்கதிகளைசொல்லி எனது முதல் விசாரணை நிரூபன வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

7. லோகநாதன் ஒரு பொன்னுச்சாமி என்பவரிடமிருந்து தாவா சொத்துக்களை பொறுத்து பொது அதிகார ஆவணம் எழுதி பெற்றுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லி உள்ளேனா என்றால் ஆமாம்.

(18, 20 வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.03 19:04:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்